# ‘மிக்ஜாம்’ புயல் பேரிடர்: முதல்வரிடம் குவியும் நிவாரண நிதி!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் அப்துல் ரஹ்மான் மற்றும் உறுப்பினர்கள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் ப. அப்துல் சமது, திருமதி பாத்திமா முசாபர், முகமது பஷீர், எம்.கே. கான், சையது ரேகான் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், எல்&டி நிறுவனத்தின் துணை செயல் தலைவர் எம்.வி. சதீஷ், மண்டல மேலாளர் கே.ஜி. சத்தியநாராயணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், டி.எஸ்.எஃப். குழுமத்தின் இயக்குநர் ஸ்ரீவட்ஸ் ராம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், கேப்லின் நிறுவனத்தின் தலைவர் பார்த்திபன் மற்றும் இயக்குநர் தீனதயாளன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் 2 கோடி ரூபாயும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 2 கோடியே 30 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், ஹுண்டாய் இந்தியா நிறுவனத்தின் தலைமை உற்பத்தி அதிகாரி சி.எஸ். கோபாலகிருஷ்ணன், மூத்த செயல் இயக்குநர் ஜே.எச்.லீ, துணைத் தலைவர் டி. சரவணன், கள தலைவர் எஸ். விஜயபாஸ்கர் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், முருகப்பா குழுமத்தின் முழு நேர இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் முத்து முருகப்பன், மூத்த துணைத் தலைவர் டி. கண்ணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், செட்டிநாடு குழுமத்தின் தலைவர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (26.12.2023), தலைமைச் செயலகத்தில், வி.என்.சி. நிறுவனத்தின் மேலாண்மை பங்குதாரர் சி. பாஸ்கர் மற்றும் நிர்வாக குழுவினர் எல். அரிஹரபுத்திரன், அமித் சிங், பிரசாந்த் சின்ஹா, கவுஷிக் தத்தா ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.